[19th August 1961

Government offices in rented buildings

*1259 *Q.*—Sri T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the amount of annual rent paid by the Government towards housing Government offices and for other reasons in the City of Madras;

(*b*) the names of offices functioning in rented buildings; and

(*c*) the scheme formulated by the Government to house all Government offices in Government buildings?

The Hon. Sri P. KAKKAN : (*a*) The total rent paid by Government for private buildings in Madras City taken for locating Government offices and other purposes is about Rs. 35,000 per month or Rs. 4,20,000 per annum.

(*b*) the attention of the Member is invited to the paper[a] placed on the table of the House.

(*c*) A comprehensive scheme for the construction of a multi storied building at Chepauk, for locating Government offices, is under the consideration of the Government.

Sri N. R. THIAGARAJAN : சென்னை நகரில் இந்த அலுவலகங்கள் 108 இடங்களில் பரவிக் கிடக்கின்றன. ரூபாய் 4,20,000 வரை வாடகை கொடுக்கிறார்கள். ஆகவே, இவைகளைக் கூட்டி, ஒரு இடத்தில் கட்டிடம் கட்டி, அங்கே வைக்க ஏற்பாடு செய்யப் படுமா ?

The Hon. Sri P. KAKKAN : ஒரே இடத்தில் கூட்டுவதற்காகத் தான் மேல் மாடிகள் உள்ள கட்டிடத்தை சேப்பாக்கத்தில் கட்ட உத்தேசம் என்று சொன்னேன்.

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware that high rents are paid by the Government even for dilapidated buildings in the Madras City?

The Hon. Sri P. KAKKAN : I do not think so.

Sri M. KALYANASUNDARAM : மேசைமேல் வைக்கப்பட்டிருக்கும் பட்டியலின் 102-வது ஐடம், 'Director of Industries and Commerce Additional Accommodation என்பதற்கு, ரூ. 2,617.50 மாதம் ஒன்றுக்கு வாடகை என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது? சமீபத்தில் யாராவது என்ஜினிரிங் அதிகாரிகள் இதைப் பார்வையிட்டார்களா ?

The Hon. Sri P. KAKKAN : வாடகை, என்ஜினியர்கள் பார்த்துச் சொன்னதின் பேரில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. சமீபத்தில் பார்த்தது உண்டா என்ற கேள்விக்கு, அதை ஒரு தனிக் கேள்வியாகப் போட்டால், விவரங்கள் தருகிறேன்.

---

[a] Printed as Appendix III on pages 448–452 infra.

19th August 1961]

SRI K. VINAYAKAM : அந்தக் கட்டிடம் பல ஆண்டுகளாக மராமத்து செய்யப்படவில்லை ; ஜாயிண்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் ஆபீஸ் அறையில மழை பெய்யும்போது, உள்ளே தண்ணீர் விழுந்து, அதனால் அவர் டேபிள் மேல் உள்ள பைல்கள் கூட ஒன்றிரண்டு வீணாகிவிட்டிருக்கின்றன. அந்த பைல்கள் வேண்டுமென்று கேட்டால், கிடைக்கவில்லை ; காரணம் மழை காரணமாக அவை காணாமற் போய்விட்டன, கெட்டுப் போய்விட்டன என்கிறார்கள். ஆகவே, இதை அரசாங்கமே எடுத்துக்கொண்டு மராமத்து செய்து அந்தச் செலவை குடிக்கூலியிலிருந்து சரிக்கட்ட ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் தியாகராஜன் அவர்களுக்குச் சொன்னதுபோல், பல மாடிகள் உள்ள கட்டிடம் கட்ட உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. அப்படிக் கட்டப்படும் போது முதலில் அங்கே வைக்கப்பட வேண்டிய அலுவலகம் இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டுதான். அப்படி அவர்களும் சம்பந்தப்பட்ட மந்திரியவர்களும் சொன்னதின் பேரில்தான், கட்டிடம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பழைய கட்டிடத்தை ரிபேர் செய்வதைவிட புதுக் கட்டிடமே கட்டிவிடுவது நல்லது என்று ஏற்பாடு செய்யப்படுகிறது.

SRI A. VEDARATHNAM : சென்னை நகரத்திலேயே அரசாங்கக் காரியாலயங்கள் பலவற்றை வைத்திருப்பதனால் இங்கு நெருக்கடி அதிகமாகிறது. அதனால், இந்தக் காரியாலயங்களில் சிலவற்றை ஏன் 'மொபுஸலு'-க்கு மாற்றக் கூடாது ? வெளியிடங்களில் மாற்றினால் அதிக வாடகை கூடக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. தஞ்சை அரண்மனையில் வேண்டிய இடம் இருக்கிறது. அங்கே ஏற்கனவே சில காரியாலயங்கள் நடந்து வருகின்றன. ஆகவே, அதுபோன்ற இடங்களைப் பயன்படுத்தும் வண்ணம் சில முக்கியமான காரியாலயங்களை ஏன் 'மொபுஸலு'-க்கு மாற்றக் கூடாது ?

THE HON. SRI P. KAKKAN : இராஜ்யத்தின் தலைநகரத்தில் எந்த எந்தக் காரியாலயங்கள் முக்கியமாக இருக்கவேண்டுமோ அப்பேர்ப்பட்டவைகள்தான் இங்கே இருக்கின்றன. தற்போது விவசாய இலாகா டெபுடி டைரக்டர் காரியாலயம் போன்றவை மாவட்டங்கள் சிலவற்றில் அமைக்கப்பட்டிருக்கின்றன. செலவைப் பார்த்தால் எல்லாம் சரியாகத்தான் வந்துவிடும். இதெல்லாம் பார்த்துத்தான் அரசாங்கம் காரியாலயங்களை இன்று சென்னை நகரத்தில் வைத்திருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : மவுண்ட் ரோடிலுள்ள கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் காலி இடம் அதிகமாக இருக்கிறது. அந்த பெரிய கட்டிடம் கட்டி, வாடகைக்கு இருக்கும் காரியாலயங்களையெல்லாம் ஒரே இடத்தில் வைத்தால் நல்லதல்லவா ?

THE HON. SRI P. KAKKAN : கவர்ன்மென்ட் எஸ்டேட்டுக்குள்ளே இருக்கும் காலி இடம் மேலும் சில காரியங்களுக்கு அரசாங்கத்திற்குத் தேவைப்படலாம். எப்பொழுதும் இடம் கொஞ்சம் கையில் வைத்துக்கொள்வது நல்லது. இருக்கும் சில

இடங்களில் கட்டிடம் கட்ட ஆரம்பிக்கிறோம். எந்தெந்த இடத்தில் உடனடியாகக் கட்டுவது நல்லது, எந்த இடங்களை 'ரிஸர்வ்'-வாக வைத்துக் கொள்ளலாம் என்பதைப் பார்த்துத்தான் காரியங்கள் செய்கிறோம்.

Causeway across Goddar

* 1260 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to construct a causeway over Goddar on Nariyambattu-Mailpatti Road in Gudiyatham taluk to facilitate transport of sugarcane to the sugar factory in Pachakuppam?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A request made by a sugar mill to this effect is under the consideration of the Highways Department.

SRI A. A. RASHEED : Sir, since the monsoon is fast approaching, will the Government take up the work at least during this year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Chief Engineer, Highways, is looking into the matter.

Adhirampattinam Port

* 1261 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether representations have been received by the Government from the residents of Adhiramapattinam regarding improvements to the port at that place; and

(*b*) if so, the steps taken in this regard?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI R. SRINIVASA IYER : கனம் மந்திரி அவர்கள், 'அதிராம் பட்டின வாசிகளிடமிருந்து மனுக்கள் வரவில்லை' என்று சொல்லி விட்ட பிறகு மேற்கொண்டு சொல்வதில் பிரயோஜனம் இல்லை. மூன்றாவது திட்ட காலத்தில் கீழ்க் கடலோரப் பகுதியிலிருக்கும் 'மைனர் போர்ட்'-களை அபிவிருத்தி செய்வதற்காக 18 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டி ருக்கிறது. அதிராம்பட்டினத் துறைமுகத்திலிருந்து தேங்காய், விறகு, உப்பு போன்ற முக்கியமான பொருள்கள் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. இப்பொழுது அது அடைபட்டிருப் பதால், அதை நல்ல முறையில் செப்பனிட்டு அபிவிருத்தி செய்ய மூன்றாவது திட்டத்தில் முயற்சி எடுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : கீழ்க் கடலோரப் பகுதியில் இருக்கும் சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக, கனம் அங்கத்தினர் சொன்னபடி, மூன்றாவது திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி,